**விழுப்புரம் - கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டம் கண்டரக்கோட்டை கிராமத்தில் பொதுப்பணித்துறை – நீர்வள ஆதாரத்துறை சார்பாக மாவட்ட கனிமவள அறக்கட்டளை நிதியின் கீழ் ரூ.33 கோடி மதிப்பீட்டில் பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணியினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் மற்றும் தொழிற்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்களும் பூமி பூஜை வாயிலாக துவக்கி வைத்தனர்.**

கடலூர் மாவட்டத்தில் சுரங்கப்பணிகளால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் மற்றும் குடிநீர் பற்றாக்குறை ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கிலும் மேலும் இத்திட்டத்தின் வாயிலாக விழுப்புரம் மாவட்ட விவசாய நிலங்கள் பாசன வசதி பெறவும் மற்றும் குடிநீர் பற்றாக்குறையினை போக்கமவும் கடலூர் கனிம அறக்கட்டளை நிதியின் கீழ் பண்ருட்டி வட்டம் கண்டரக்கோட்டை கிராமத்தில் பெண்ணையாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்ட அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டது. தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதி 20017-ல் 16(6)-ன்படி அரசாணை எண்.(D) 59 தொழில் (MMD-1) துறை நாள்:27.05.2020 மூலம் ரூ.33.00 கோடியில் மேற்கண்ட இடத்தில் தடுப்பணை கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

கட்டப்படவிருக்கும் தடுப்பணையின் நீளம் 575 மீட்டர், உயரம் 1.50 மீட்டர் ஆகும். கொள்ளளவு 28.58 மில்லியன் கன அடி ஆகும். தடுப்பணையில் உட்சபட்ச வெள்ள நீர் வெளியேற்றும் திறன் வினாடிக்கு 1,51,320 கன அடி ஆகும். மேலும் இப்பணியில் தடுப்பணையின் மேற்புறம் 1500 மீட்டர் தூரமும் கீழ்ப்புறம் 500 மீட்டர் தூரத்திற்கு இரு புறமும் வெள்ளத்தடுப்பு கரைகள் அமைக்கப்படவிருக்கின்றன். மணற்போக்கிகள் 3.00 மீட்டர் * 1.50 மீட்டர் அளவில் தலா மூன்று எண்கள் இருபுறமும் அமைக்கப்படவிருக்கின்றன.

இந்த திட்டத்தினால் கடலூர் மாவட்டத்தில் கண்டரக்கோட்டை, அக்கடவல்லி, பெரியகள்ளிப்பட்டு, பூண்டி, புலவனூர், மேல்குமாரமங்கலம், ஏரிப்பாளையம், மற்றும் குரத்தி ஆகிய கிராமங்களும், விழுப்புரம் மாவட்டத்தில் சின்ன கள்ளிப்பட்டு, சேர்ந்தனூர், அரசமங்களம், தென்குச்சிப்பாளையம், வடவாம்பலம், குச்சிப்பாளையம், நரசிங்கபுரம் மற்றும் பூவரசன்குப்பம் ஆகிய கிராமங்கள் பயனடையும், சுமார் 46,380 மக்கள் பயனடைவார்கள். இதனால் 7828 குழாய் கிணறுகள் பயன்பெறும். இத்தடுப்பணை கட்டப்படுவதின் மூலம் நிலத்தடி நிர் செறிவூட்டப்பட்டு நீர் மட்டம் வெகுவாக உயரும். மேலும் குறைந்துகொண்டே செல்லும் நிலத்தடி நீர் மட்டம் தடுக்கப்படும். விவசாய உற்பத்தி அதிகரிக்கப்படும். குடிநீரின் தரம் உயரும் இதன் மூலம் சுரங்கப்பணிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உறுதி செய்யப்பட்ட குடிநீர் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

இந்நிகழ்வினில் விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள், கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திரசேகர் சகமுரி.இ.ஆப., அவர்கள், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் திருமதி.சத்தியா பன்னீர்செல்வம், வானூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.சக்ரபாணி, சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.ஏ.பாண்டியன், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.ஆர்.முத்தமிழ்ச்செல்வன், கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திருமதி.ஸ்ரேயா.பி.சிங்.இ.ஆ.ப., முன்னாள் பாராளுமன்ற உறுப்பனர் திரு.அருண்மொழித்தேவன் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்**